UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தெய்வத்தைக் கட்டுதலும் விடுவித்தலும் - இலங்கைக் கிழக்கு மாகாணப் பத்ததிச் சடங்குகளில் மந்திர வழிபாடுகள்

**கலைமகள் கிருஷ்ணமூர்த்தி**
முனைவர்பட்ட ஆய்வாளர், நாட்டார் வழக்காற்றியல் துறை
ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)
பாளையங்கோட்டை, திருநெல்வேலி

மக்களின் வழிபாட்டிலும் வாழ்வியலிலும் மந்திரங்கள் முக்கிய இடம்பெறுகின்றன. இம்மந்திரங்கள் புராதன மனிதர் உலகைப் புரிந்துகொள்ள உருவாக்கியதாகும். மானிடவியலாளர்கள் கருத்தின்படி, இயற்கையின் இயக்க விதிகளைப் புரிந்துகொள்ள இயலாத ஆதிமனிதர்கள் இயற்கையைக் கட்டுப்படுத்தவும் அதனிடமிருந்து சில பயன்களைப் பெற்றுக்கொள்ளவும் உருவாக்கிய ஒன்றே மந்திரங்களாகும். புராதன மனிதர்கள் இயற்கையோடு போராடி வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஆயினும் இயற்கைச் சக்திகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் மழை, புயல் போன்ற இயற்கை அனர்த்தங்களை அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. இயற்கையின் செயற்பாடு புரியாத புதிராக இருந்தது. இதற்கான காரணத்தை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே அவற்றில் ஆன்மா அல்லது ஆவி மறைந்திருப்பதாக நம்பினார்கள். அதில் உறைந்துள்ள ஆவியைக் கட்டப்படுத்துவதன் மூலமாகவும் திருப்தி செய்தல் ஊடாகவும் விளைவைப் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பினார்கள் (ஆ. சிவசுப்பிர மணியன், 2010: 26).

ஜேம்ஸ் பிரேசர், எமில் தர்க்கைம் ஆகிய அறிஞர்கள் மந்திரங்களை வகைப்படுத்துவதுடன் அவற்றின் செயற்பாடு குறித்தும் விளக்குகின்றனர். பிரேசர் மந்திரங்களை ஒத்த மந்திரம், தொத்து மந்திரம் என வகைப்படுத்துகின்றார். இவர் மந்திரங்களின் நோக்கத்தையும் விளைவையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு வகைப்படுத்துகின்றார். 'ஒத்த மந்திரங்கள் என்பது ஒத்தது ஒத்ததை உருவாக்குகின்றது. இதன்படி ஏற்பட வேண்டி விளைவும் அதனை அடையச் செய்யப்படுகின்ற செயலும் ஒத்திருக்கும்' (ஆ. சிவசும்பிரமணியன், 2017: 37). சான்றாக, குழந்தைவரம் வேண்டி கோயில்களில் தொட்டில் கட்டிவிடும் வழக்கத்தைக் கூறலாம். தொத்து மந்திரம் என்பது 'பொருள்களை ஒருமுறை ஒன்றாகச் சேர்ந்திருக்கவிட்டால் அவற்றை எவ்வளவுதான் வேறாகப் பிரித்தாலும் அவை என்றும் ஒன்றாகவே இருக்கும். ஒன்றுக்கு ஏதாவது நடந்துவிட்டால் அது மற்றவற்றையும் அதுபோல் பாதிக்கும் என்ற அளவுக்கு அவற்றில் உறவுகள் உறுதியாக நிலைபெறுகின்றன. நோயால் பீடிக்கப்பட்டவர் தலையைக் கோழி முட்டையால் சுற்றி, பின்னர் அதனை வீதியில் எறிவதைக் கூறலாம்' (மேலது 2017: 39). அத்துடன் மந்திரத்தின் பயன்பாடு கருதி தூயமந்திரம், தீயமந்திரம், உற்பத்திமந்திரம் எனப் பிரிக்கின்றார். மேலும் பிரேசர் மந்திரம் அமைப்பு விருப்பம், செயல், சொல் ஆகிய உட்கூறுகளைக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றார். விருப்பம் என்பது குறிப்பிட்ட மந்திரத்தின் நோக்கமாகும். செயல் என்பது பயனை அல்லது விளைவை அடைவதற்கான மந்திரச் செயற்பாட்டைக் குறிக்கின்றது. சொல்

என்பது மந்திரத்தில் பயன்படும் சொற்க ளாகும். இவை மந்திரச் சூத்திரங்களாகக் காணப்படுகின்றன என விளக்குகின்றார் (மேலது, 2017: 36-38).

தர்க்கைம் சமயத்தின் தோற்றம், செயற்பாடு, சமயத்திற்கும் மந்திரத்திற்குமிடையிலான வேறுபாடு போன்றவை குறித்து விளக்குகின் றார். அத்துடன் மந்திரவாதி, மக்கள் இருவருக்குமிடையிலான உறவுநிலை குறித்தும் தன் அவதானங்களை முன் வைத்துள்ளார். மந்திரங்கள் புனிதத்தன்மை சார்ந்தவை. அவை சமயத்திற்கு வெளியே இயங்குகின்றன. அதைப் பெரும்பாலான மக்கள் பின்பற்றுகின்றனர். ஆனால் அது சமயமில்லை. மேலும் நிறுவன சமயக் கட்டமைப்பு பின்பற்றும் விதிமுறை மந்திரச் செயற்பாடுகளுக்கு இல்லை எனக் கூறுகின்றார். இதிலிருந்து தர்க்கைம் கூறும் சமயம் நிறுவன சமயமாகவும் மந்திரம் நாட்டார் வழிபாடாகவும் இருப்பதைப் புரிந்து கொள்ளலாம் (எமில் தர்க்கைம்,1995:39).

மந்திரங்கள் சமயத்தன்மை கொண்டவை. மந்திரம், சமயம் இரண்டையும் திட்டவட்ட மாகப் பிரிக்க முடியாது. அதேவேளை மந்திர நம்பிக்கைகளுக்கு சமயத்தைப் போன்ற விதி ஒழுங்குமுறைகள் இல்லை. அவை பன்மைத்தன்மையான செயற்பாடு களைக் கொண்டிருப்பதோடு அவை பெரும் பாலானவர்களால் பின்பற்றப் படுவதாகவும் அமைகின்றது. ஆனால் அவர்கள் சமயத்தைப் பின்பற்றுபவர்களை விடக் குறைவானவர்கள் (மேலது, 1995:41). மேலும் மந்திரச் செயற்பாட்டில் ஈடுபடும் பூசாரி அல்லது மந்திரவாதிக்கும் (magician, மக்களுக்கும் இடையிலான தொடர்பைப் பின்வருமாறு விளக்குகின்றார்: பூசாரி தான் சார்ந்த சகமக்களிடமிருந்து ஒதுங்கி இருப்பவர். ஆனால் சில நேரங்களில் அவருக்குத் தன் மந்திரச் செயற்பாட்டைச் செய்ய, சமூகக்குழு தேவைப்படுவதால் அதற்கென ஒரு சமூகக்குழுவை உருவாக்கு கின்றார். இச்செயற்பாடு அனைவரையும் உள்ளிணைப்பதில்லை. மந்திரவாதியுடனும் மந்திரத்துடனும் தொடர்புடையவர்களையே இணைக்கும். இவ்விருவர்க்குமிடையிலான தொடர்பு நீடித்த தொடர்பாக இல்லாமல் தற்செயலானதாகவும் நிலையற்றதாகவும் இருக்கும். இவர்கள் ஒரு குழுவாக வாழ்வ தில்லை. அவ்வுறவை வைத்தியருக்கும் நோயாளிக்கும் உள்ள உறவு எனக் கூறுகின்றார் (மேலது, 1995:42-43).

இந்தப்பின்னணியில் இக்கட்டுரை இலங்கை யில் பத்ததி வழிபாட்டிலுள்ள மந்திரச் சடங்குகளை ஆராய முற்படுகின்றது. தமிழர் களிடையே நிலவும் வழிபாடுகளைப் பத்ததி அல்லது பத்தாசி வழிபாடு, ஆகம வழிபாடு என வகைப்படுத்தலாம். இதில் ஆகம வழிபாட்டில் சமஸ்கிருத மந்திரங்களும் பத்ததி வழிபாட்டில் தமிழ் மந்திரங்களும் இடம்பெறுகின்றன. ஆகமவழிபாட்டில் நடை பெறும் பூசைகள், ஹோமம், அபிசேகங்கள், அர்ச்சனைகள் போன்றவை சமஸ்கிருத மந்திரத்தால் நடைபெறுகின்றது. பத்ததி வழிபாடுகள் இவ்வாறில்லை. அவை கதவு திறத்தல், மடை வைத்தல், தெய்வத்தை வரவழைத்தல், தெய்;வமாடுதல் போன்ற சடங்குகள் அனைத்தும் பத்ததிமுறையில் அதற்குரிய தமிழ் மந்திரங்கள் மூலம் நடைபெறுகின்றன. இப்பத்ததி வழிபாடு பெரும்பாலும் கிழக்கு மாகாணத்தில் நடைபெறுகின்றது. இவை மந்திரச் சடங்கு களாகவும் மந்திரங்களற்ற மன்றாடல் முறையிலும் இடம்பெறுகின்றன. இப்பத்ததி கோயில் அமைக்கும் முறை தெய்வமாட்டும் முறை, கோயில் கதவு திறக்கும்முறை, மடை வைக்கும்முறை. போன்றவை குறித்து விளக்குகின்றது. இவ்வழிபாட்டைச் செய்பவர் கப்புகர் அல்லது பூசாரி என அழைக்கப் படுகின்றார்.

இப்பத்ததி மரபு வாய்மொழி ரீதியாகப் பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டு வருகின்றது. ஒரு கோயிலை உருவாக்கும் முன்னர் அவ்வூர் மக்கள் மந்திர அறிவுடை யவர்கள் ஆகியோர் தங்கள் கோயில் வழிபாட்டை எந்த முறையைப் பின்பற்றி அமைக்க வேண்டும் என ஆலோசிக்கின்ற னர். பின்னர் அவர்கள் பத்ததிமுறையைப் பின்பற்றும் கோயில்களுக்குச் சென்று அங்குள்ள முறைகளைப் பற்றித் தெரிந்து கொண்டு, தங்கள் கோயிலுக்கான பத்ததியை உருவாக்குகின்றனர். இப்பத்ததி ஒவ்வொரு கோயிலுக்கேற்பவும் தெய்வங்களைப் பொறுத்தும் வேறுபடுகின்றது. இவ்வழிபாடு ஆனி மாதம் தொடக்கம் ஆடி மாதம் வரையான காலங்களில் நடைபெறுகின்றது. பத்ததி வழிபாட்டுக்கோயில்களில் வருடமொரு

முறை கதவுதிறந்து வைத்து வழிபாடு இடம்பெற்ற பின்னர் கோயில் கதவைப் பூட்டும் வழக்குள்ளது. இதன் பொதுவான நிகழ்வுகளாகப் பின் வருபவை நிகழ்கின்றன: கப்புகரைக் (தலைமைப்பூசாரி) கோயிலுக்கு அழைத்து வரல், கதவு திறத்தல், காளாஞ்சிப்பூசை, தினச்சடங்கு, ஊர்சுற்றல், நெல்லுக்குத்துச் சடங்கு, தீர்த்தமாடுதல், கோயில் கதவடைத் தல். இவற்றுடன் பத்ததிமுறையைப் பின்பற் றும் கோயில்களில் தெய்வமாடுதல் முக்கிய சடங்காக நிகழ்கின்றது. இச்சடங்கில் தெய்வ மாடுதலும் தெய்வத்தைக் கட்டுதலும் நடைபெறுகின்றன.

பத்ததி வழிபாட்டில் பயன்படுத்தும் மந்திரங் கள் வேண்டல் மந்திரங்களாகவும் தெய்வத்தைக் கட்டும் மற்றும் தெய்வ உருவேற்றும் மந்திரங்களாகவுமுள்ளன. கோயில் கதவுதிறத்தல், மடைவைத்தல் போன்றவற்றில் பயன்படுத்தும் மந்திரங்கள் வேண்டல் மந்திரங்களாகும். இவை தெய்வத்தை வரும்படி அழைத்தல், பூசை, படையலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டல் போன்ற நோக்கங்களைக் கொண்டனவாகவு ள்ளன. தெய்வமாடுபரை ஆட்டுவதற்கும் அத்தெய்வத்தைக் கட்டுவதற்கும் பயன்படும் மந்திரங்கள் வழிபாட்டுடன் இணைந்த மந்திரங்களாகக் காணப்படினும் அவற்றின் நோக்கமும் செயல்பாடும் வேறுபடுகின்றன.

எனவே இக்கட்டுரை மாரியம்மன் வழி பாட்டில் இடம்பெறும் மந்திரச்சடங்குகளின் இன்றியமையாத் தன்மையை விளக்குவது டன் இம்மந்திரச் சடங்குகளின் உருவாக்கம், அவற்றின் நோக்கம், அமைப்பு போன்ற வற்றைப் புரிந்துகொள்ள முனைகின்றது. அவ்வகையில் இக்கட்டுரையின் முதற்பகுதி மாரியம்மன் பத்ததி வழிபாட்டில் நிகழும் மந்திரச்சடங்குகள் பற்றி விபரிக்கின்றது. இரண்டாவது பகுதியில் மந்திரம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளிலிருந்து பத்ததி மந்திரவழிபாடு எவ்வாறு வேறுபடு கின்றது என்பது குறித்து ஆராய்கின்றது.

### சமூக இயக்கமும் மந்திரச்சடங்குகளும்

மாரியம்மன் வழிபாட்டில் நடைபெறும் மந்திரச் சடங்குகள் பின்வருமாறு: கோயில் கதவு திறக்கும்போது பயன்படும் மந்திரங் கள் (கோயில் வழிபாட்டைச் செய்வதற்கு அனுமதி கேட்டல்), தீப்பாயும்போது தீக்குழி சுடாமல் இருப்பதற்குத் தீயைக் கட்டும் மந்திரம், ஊரைக் கெட்ட சக்திகளிடம் இருந்து காப்பாற்றப் பயன்படு;த்தும் மந்திரம், படையலைப் பரிகளங்கள் பொறுப் பெடுக்குமாறு கூறும் மந்திரங்கள். இவற்றைத் தவிர தெய்வத்தைக்கட்டுதலும் தெய்வத்தை ஆட்டுதலும் நடைபெறுகின்றன.

கோயில் கதவு திறத்தல் பின்வருமாறு நடைபெறுகின்றது. இந்நிகழ்வு இரவு பனிரெண்டு மணிக்குப்பின்னரே ஆரம்பமா கின்றது. முதலில் கோயிலின் வெளிமண்டபம், அதனை அடுத்துள்ள மண்டபம், கருவறை ஆகியவற்றின் வாயில்களில் மடைவைக்கின் றனர். இம்மடை பழம், வெற்றிலை, தாமரைப்பூ கொண்டு ஒற்றைப்படை எண்ணிக்கைகளில் (3,5,7) அமைகின்றது. அத்துடன் மடைகளுக்குப் பொதுவாக ஒரு பூசணிக்காய் வைக்கின்றனர். பின்னர் கற்பூரத்தைக் கொளுத்திக் கப்புகர் மந்திரங்களை உச்சாடனம் செய்கின்றார். இம்மந்திர உச்சாடனம் மெதுவாக ஆரம்பித்துப் பின்னர் வேகம் உச்சத் தையடைய பூசணியை ஒரேவெட்டில் இரு துண்டுகளாக வெட்டி அதன் மேலே குங்குமம் தடவுகின்றார். இதன் பின்னர் மடையைக் கடந்துசென்று கோயில் கதவைத் திறக்கின்றார்.

கதவு திறத்தல் சடங்கின்போது சிறுவர்கள், கர்ப்பிணிப்பெண்கள் போன்றோர்களை அனுமதிப்பதில்லை. ஏனெனில் இதுவரை பூட்டிய கோயிலைக் காத்த பூதகணங்களை கோயிலிலிருந்து வெளியே அனுப்புவதால் அவை கெடுதல் விளைவிக்கும் என்னும் நம்பிக்கை நிலவுகின்றது. அத்துடன் இச்சடங்கில் கப்புகர் பூசணிக்காயை அதிவேகத்தில் மந்திரத்தை உச்சாடனம் செய்தபடி வெட்டுவார். அவ்வேகத்தினால் பூசணி இரு துண்டுகளாகச் சற்றுத்தள்ளி விழும். அவ்வாறு விழுதல் நல்ல சகுணம் என மக்கள் நம்புகின்றனர். இச்சம்பவத்தில் அப்பூசணி அவ்வாறு விழவில்லையாயின் வழிபாட்டில் இடைஞ்சல்கள் ஏற்படும் என நம்புகின்றனர்.

தீக்குழியைக் கட்டும் சடங்கு பின்வருமாறு: திக்குழி சுடாமல் இருப்பதற்காக இச் சடங்கு செய்யப்படுகின்றது. இரவு எட்டுமணியளவில்

மாரியம்மன் கோயிலுக்கு எதிரே தீக்குழியை ஆயத்தப்படுத்துகின்றனர். தீப்பாயும் இடத்தில் நான்கு அடி ஆழம் கொண்ட முப்பதடி நீளமான குழி தோண்டப்படுகின்றது. தீக் குழியைப் பார்த்தபடி வைரவருக்குப் பந்தல் அமைக்கின்றனர். பின் தீக்குழியின் நான்கு மூலைகளிலும் இளநீர், வெற்றிலை பாக்கு, பழம், கமுகம்பாளை கொண்டு மடைகள் வைக்கின்றனர். முதலில் கப்புகர் வைரவர் க்குப் பூசை செய்து மந்திர உச்சாடனம் செய்தபடி மடைகளுக்குப் பூசை செய்கின்றார். பின் மந்திரம் கூறியபடி முதலில் தீக்குழிக்குள் கட்டையை வைத்துப் பூசை செய்கின்றார். பிற்பாடு நான்கு மூலையிலும் மந்திர உச்சாடனங்கள் செய்யும்போது எல்லாக் கட்டாடிகளும் தெய்வமாடி சத்தோசமாய் சத்தம்போடுகின்றனர். பின்னர் கப்புகர் கட்டைகளுக்குக் தீமூட்டுகிறார். இந் நிகழ் வானது நிலம், நீர், காற்று, ஆகாயம் ஆகிய நான்கு சக்திகளையும் காவல்வைத்து நான்கு மடைகள் வைக்கப்படுவதாகவும் எல்லாவற்றையும் காக்கும்படி வைரவரை நிலைநிறுத்தி தீக்குழி மூட்டுவதாகவும் கூறுகின்றனர். தீப்பாயும்போது தீக்குழி சுடுமாயின் கப்புகர் முறையாகத் தீக்குழியை மூட்டி, தீயைக் கட்டவில்லை. அதனால் தீக்குழி சுடுவதாக நம்புகின்றனர்.

இவற்றைத்தவிர மந்திரங்கள் மூலம் தெய்வமாடுதல், விநாசகப்பானை (பொங்கல் வைத்தல்) ஆகிய சடங்குகள் நிகழ்கின்றன. தெய்வமாடலில் மந்திரங்கள் தெய்வமாட்ட வும்; தெய்வத்தைக் கட்டவும் பயன்படுகின் றது. அதுபோல் மந்திரத்தினால் பொங்கல் பானையைப் பொங்காமல் கட்டுதலும் அக்கட்டை அவிழ்த்தலும் நடைபெறுகின்றது. இந்நிகழ்வில் குறிப்பிட்ட நோக்கை அடையப் பயன்படும் மந்திரங்கள், அந்நோக்கை அடையாமல் கட்டும் மந்திரங்கள் அக்கட்டை அவிழ்க்கும் மந்திரங்கள் என மூன்றுவகை யான மந்திரங்கள் செயற்படுகின்றன. இதில் விநாசகப்பானைச் சடங்கில் நடைபெறும் மந்திரச்செயற்பாடு பின்வருமாறு: இதில் மூன்று பானைகள் பொங்கப்படுகின்றன. இப்பொங்கல் கெட்டவினைகள் அல்லது தீங்கு விளைவிக்கும் சக்திகள், அவ்வூரை விட்டு அகல வேண்டும் என்னும் நோக்கில் நிகழ்கின்றது. இப்பானைகளில் முதலாவதாக நடுவிலுள்ள விநாசகப்பானையின் அடுப்பை யும் அடுத்து வலப்பக்கமுள்ள மாரியம்மனுக் குரிய அடுப்பையும் அதன்பின் பேச்சியம் மனுக்குரிய அடுப்பினையும் பற்றவைப்பார். பானைக்கருகில் கப்புகர், கட்டாடிகள், உதவிப்பூசாரி ஆகியோர் நிற்கின்றனர். இவர்களைச்சுற்றி மக்கள் அமர்ந்திருக்கின் றனர். முதலில் விநாசகப் பானைக்குத் தீ அதிகம் போடுவார்கள். முதலில் விநாசகப் பானையே பொங்கவேண்டும். பின்னர் மாரிக்குரிய பானையும் அடுத்து பேச்சிக் குரிய பானையும் பொங்க வேண்டும். அப்போது பக்தர்களுடன் அமர்ந்திருக்கும் ஒரு சிலர் இப்பானைகளைப் பொங்குவதைத் தடுக்கும் முகமாக மந்திரத்தினால் கட்ட முற்படுவார்கள். இவ்வாறு கட்டும்; போது பானை சூடேறாமல், வைத்ததுபோலவே காணப்படும். அப்போது பூசாரி அடு;ப்பில் எரியும் நெருப்பை அணைப்பார். பின்னர் மூன்று பானைகளுக்கும் முன்னால் கும்பம் வைத்து, ஒரு தாமரைப்பூவை எடுத்து, பானையைச்சுற்றியபடி மந்திரம் சொல்லத் தொடங்குவார். மந்திரம் சொல்லத் தொடங்கியபின் மீண்டும் அடுப்பிற்கு நெருப்புப் போட்டுப் பொங்கத் தொடங்கு வார்கள். பின்னரே பால் பொங்கி வழியும். இவ்வாறாக மந்திரக்கட்டுக்களும் அக்கட்டை அவிழ்க்கும் சடங்குகளும் நடைபெறும்.

பத்ததி வழிபாட்டில் தெய்வமாட்டுதல், தெய்வத்தைக்கட்டல் ஆகிய சடங்குகள் தினசரி பூசை, ஊர்சுற்றிவருதல் போன்ற வேளைகளில் நடைபெறுகின்றது. தெய்வமாடு தல் தெய்வ உரு குறிப்பிட்ட மனித உடலைத் தெரிவு செய்தல், தெய்வமாட்டு தல், கட்டுச்சொல்லல், கட்டுதல், படுகளம் போடுதல் போன்றவற்றை உள்ளடக்கியதா கும். இதன்போது கோயில் வெளிமண்டபத் தில் அல்லது முன்றலில் மக்கள் குழுமி யிருக்கின்றனர். அப்போது பறை, சொர்ணாளி வாசிக்கின்றனர். கட்டாடிகள் (தெய்வமாடுபவர்கள்) கோயில் கிணற்றில் தலைகுளித்து வேட்டியைத் தார்ப்பாச்சி போன்று கட்டிக்கொண்டு ஈரஉடையுடன் கோயில் வெளிமண்டபத்தில் வந்து நின்று தெய்வமாடுகின்றனர். சில தெய்வமாடுபவர் கள்; பறை, சொர்ணாளி வாசிப்பிற்கேற்ப இயல்பாகவே ஆடத் தொடங்குவார்கள். அவ்வேளை ஆடாமல் நிற்கும் தெய்வமாடு பவர்களைப் உதவிப்பூசாரிகள் மந்திரங்கள்

மூலம் தெய்வமாட்டத் தொடங்குவார்கள். இவ்வேளைகளில் கட்டாடிகளைத் தெய்வ மாடாமல் கட்டுகின்றனர். அதாவது ஒருவரில் இறங்கும் தெய்வத்தை அவருள் இறங்க விடாமல் செய்தல் தெய்வத்தைக் கட்டுதலா கும். இவ்வாறு தெய்வம் கட்டப்பட்டால் அவர் எந்தவித அசைவும் அற்றவராகக் காணப்படுவார். இங்கு கட்டுபவர்கள் அந்த ஊரைச் சேர்ந்தவராகவோ வேறு ஊரைச் சேர்ந்தவராகவோ இருக்கலாம். தெய்வமாடும் கட்டாடிகள் கட்டப்படும்போது கோயிலிலுள்ள பூசாரிகள் கட்டுக்களை அவிழ்த்து ஆட்டுவார் கள். இந்நிகழ்வு ஒன்று தொடக்கம் நான்கு மணித்தியாலங்கள் வரை நீடிக்கும். சில கட்டுக்களை அவிழ்ப்பதற்குப் பறை, உடுக்கு, சொர்ணாளி போன்ற வாத்தியங் களையும் பயன்படுத்துகின்றனர்.

தெய்வமாடும் கட்டாடியைக் கட்டுதலை இரு முறைகளில் செய்கின்றனர். அவை: மறை முகமாகக் கட்டல், நேரடியாகக் கட்டல். மறைமுகமாகக் கட்டும்போது கட்டாடியின் காலடிமண், அவர் பயன்படுத்தும் ஆடையி லிருந்து ஒரு துண்டு, தலைமுடி போன்ற வற்றில் ஏதாவது ஒன்றைக் கொண்டு குறித்த கட்டாடியை நினைத்துக் காளி, காட்டாடி, வைரவர் போன்ற தெய்வங்களின் துணை கொண்டு மந்திரத்தால் செபம் செய்து குறித்த கட்டாடியின்மீது தெய்வஉரு ஏறாமல் கட்டுவார்கள். நேரடியாகக் கட்டுதல் என்பது தெய்வமாடும்போது மக்களுடன் மக்களாக இருந்து கட்டுதலாகும். இம்முறையில் கட்டாடியைத் தெய்வமாடமால் செய்தல், படுகளம் போடுதல் போன்ற செயல்முறை களைச் செய்கின்றனர். அதாவது ஒருவர் ஆடும்போது ஆடிக்கொண்டிருக்கும் கட்டாடிக்குச் சற்றுத்தள்ளி நின்று அவரை ஆடாமல் செய்வதற்கான மந்திரங்களை உச்சாடனம் செய்கின்றனர். அப்போது கட்டாடி திடீரென தெய்வமாடாமல் உடல் எல்லாம் முறுக்கிச் சுருண்டு நிலத்தில் விழுவார். அவ்வாறு விழுபவர்களைத் தூக்கியபின், பூசாரி அவரின் கை, கால், உடல், மீதுள்ள மந்திரக் கட்டுக்களை நீக்குவார். பின்னர் படுகளத்தை முறியடிப் பதற்கான மந்திரத்தை உச்சாடனம் செய்வதூடாகக் கட்டாடியை ஆட்டுகின்றார். இம்மந்திரச் செயற்பாட்டில் மந்திரம் கற்றவர்கள் எந்த ஊருக்குச் சென்றும் தெய்வ உருவைக் கட்டலாம் என்னும் விதி மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதே வேளை சிலகட்டுக்களை அவிழ்க்க முடியாத நிலை ஏற்படும் போது கோயிலைப் பூட்டுகின்றனர். பின் அடுத்தநாள் மீண்டும் கதவுதிறந்து ஆரம்பத்திலிருந்து பூசைசெய்த கதைகள் மக்களிடம் வழக்கிலுள்ளன.

ஊர்சுற்றி வரும்போது 'மறிப்பு' என்னும் நிகழ்வு இடம்பெறுகின்றது. மறிப்பு என்பது கப்புகர், கட்டாடி, மக்கள் அனைவரும் ஊர்சுற்றி வருகின்றனர். அவ்வாறு வரும் போது ஊர்வலத்தை இடைமறிப்பதற்காக வீதியை மறித்துக் கட்டுதலாகும். இதனை மந்திர அறிவுமிக்கவர்கள் செய்கின்றனர். (தெய்வ ஊர்வலத்தை மறிக்க விரும்பு பவர்கள் மறிக்கின்றனர்.) வீதிமுழுவதும் மறிப்பு வைத்து மறிக்கின்றனர். அப்போது கப்புகர் தன் மந்திர ஆளுமையால் தெய்வத்தை மறிப்பிலிருந்து விடுவித்து அவ்வூர்வலத்தைத் தொடர்ந்து அழைத்துச் செல்லல் வேண்டும். கோயில் வாசலில் தெய்வ ஊர்வலத்தை மறிக்கத் தொடங்கி ஒவ்வொரு வீதியிலும் மறித்தல் இடம்பெறும். இதில் இருகுழுக்களைக் காணலாம். அவை: கப்புகர், கட்டாடி ஆகியோருடன் தொடர்பு டைய குழு, தெய்வ ஊர்வலத்தை மறிப்பவருடன் தொடர்புடைய குழு.

கோயிலிலிருந்து ஊர்வலம் வரும்போது கோயில் வாசலில் முதல் மறிப்பு இடம் பெறும். அம்மறிப்பை முறித்தபின் ஊர்வலம் அங்கிருந்து வரும்போது அடுத்த நபர் தனது மறிப்பு மந்திரத்தை அதற்குரிய செயலுடன் செய்யத் தொடங்குவார். இவ்வாறு இடை மறிக்க விரும்புபவர்கள் ஊர்வலம் வருவதை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் மறிப்பின் நிமித்தம் வீதியின் குறுக்காக திருநீற்றினால் கோடு கீறி, கும்பம் வைத்து, அச்சரம்கீறி தங்கள் மறிப்புக்கேற்ற மந்திர முறையைச் செய்யத் தொடங்குவார்கள். ஊர்வலம் மறிப்புக்கு எதிரே சற்றுத்தள்ளி நிற்கின்றனர். அப்போது மறிப்பவர் மந்திரத்தைச் சொல்லி செய்முறையைச் செய்கின்றார். கப்புகர் மறிப்பவர் பக்கம் போய்நின்று மறிப்பினை முறிப்பதற்கான மந்திரத்தைச் சொல்லுகின் றார். ஆரம்பத்தில் மறிப்பவர் மெதுவாக மந்திரத்தைக் கூறத்தொடங்க பூசாரியும் தன் வெட்டுமந்திரத்தைச் சொல்லத்

தொடங்குவார். இருவரும் மெதுவாக மந்திரத்தைச் சொல்லத் தொடங்கி பின் இருவரும் வேகமாகச் சொல்லி உச்ச நிலையை அடைவர். இதற்கேற்ப பறை வாசிக்கப்படும். கப்புகர் தன் மந்திரத்தைக் கூறிக் கையில் சிலம்பும் வேப்பங்குழையும் கொண்டு அருள்வயப்பட்டுக் கட்டாடியை அழைப்பார். கட்டாடி மறிப்பைக் கடந்து செல்ல முயற்சி செய்வார். அவரால் அவ்வாறு கடந்துசெல்ல முடியாதநிலையில், முடியவில்லை எனத் தலை அசைப்பார். கப்புகர் மீண்டும் மந்திரத்தை வேகமாகச் சொல்லத்தொடங்குவார். இதற்குப் போட்டி யாக மறிப்பவரும் தன் மந்திரத்தைச் சொல்லத் தொடங்குவார். இவ்வாறான மந்திரப்போட்டி அரை மணித்தியாலம் தொடக்கம் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை நீடிக்கும். இறுதியில் கப்புகர் இடுப்பில் சொருகியுள்ள வெள்ளிப்பிரம்பை எடுத்து மந்திரம் கூறி, கட்டாடியை அழைப்பார். கட்டாடி மறிப்பைப் பாய்ந்து கடந்து செல்வார். தெய்வமாடும் கட்டாடியை நீண்ட நேரம் நிறுத்துவது மறிப்பவரின் வெற்றியாகக் கருதப்படுகின்றது.

தெய்வமாடும் கட்டாடியைத் தொடர்ந்து கட்டும்; போது அவர் வேதனையுற்று, சில சமயங்களில் கோபமடைகின்றார். அச்சமயம் கட்டியவரை அடையாளம் கண்டு அவரிடம் ‘தொடர்ந்து கட்டவேண்டாம்’ என எச்சரிக்கை செய்வதோடு கட்டியவரை அழைத்து உரையாடவும் செய்கின்றார். திகிலிவெட்டை முத்துமாரியம்மன் கோயிலில் காத்தவராயன் தெய்வத்திற்குத் தெய்வமாடிய கட்டாடியை ஒரு நபர் சுடலைக்காளி என்னும் தெய்வத்தி னூடாகக்; கட்டியுள்ளார். சுடலைக்காளி கழிப்பு, சூனியம் செய்தல் போன்ற மந்திரச் செயற்பாடுகளின்போது வரவழைக்கப்படும் தெய்வமாகும். இதனால் தெய்வமாடிய கட்டாடிகளை இத்தகைய தெய்வங்களால் கட்டுவதைத் தவிர்க்கின்றனர். இத்தெய்வத் தால் தன்னைக் கட்டியதை உணர்ந்த கட்டாடி அவரை அழைத்து உரையாடினார். அவ்வுரையாடல் பின்வருமாறு:

* கட்டாடி - மகனே நீ பெரிய குருவா? ஏன் காத்தானில வந்த முற்படுறா?
* குருவென்டா என்னெண்டு தெரியுமா மகனே! என்னோட முற்படக்குள்ள என்னெண்டு நீ முற்பட்ட நீ?
* பதில் - அம்மா மந்திரம் எண்டா செஞ்சு பாக்கத்தானே அம்மா வேணும்.
* கட்டாடி - மகனே என்னில சுடலையாலா முற்படுறா? ஒழுங்கா முற்பட்டத்தான் மகனே வந்து நானும் உன்னில முற்படுவன். சந்தோசமா முற்படு.
* கன்னியமா இருந்துக்கோ தாயாரில முற்படாத தாயாரும் உன்னில முற்படுவாவு ஆ.. சரியா எனக் கோபமாகக் கத்தினார்.

இங்குத் தெய்வமாடும் கட்டாடி தன்னிலுள்ள தெய்வத்தைக் கட்டுவதை ஏற்றுக்கொள்கின் றார். அதனைச் சரியான முறையில் செய்ய வேண்டும் என அறிவுறுத்துகின்றார்.

**மந்திரங்களின் அமைப்பு**

**எளுப்பு மந்திரம் (கட்டுப்பட்டவரை எழுப்பும் மந்திரம்)**

‘ஓம் சுந்தரி வால சுந்தரி வாலப்பிரணையா வாவா
வந்து என்முகத்ததைப்பார்
என் கையில் நாக பாசம் இருக்கிறது.
ஆம் ஐயும் கிலியும் சவ்வும் அகார சிகரத்தினாணை எளும்பு’

**மறிப்பு (தெய்வம் ஊர்வலம் செல்லும்போது மறித்துக்கட்டும் மந்திரம்)**

‘ஓம் எட்டுதட திக்கு பதினாறு கோணமும் கட்டினேன்.
இராமரும் லெட்சுமணரும் கோடி கட்டி மறைத்தால் போலே
நானும் இந்தக் கோட்டை கொண்டு மறித்தேன்.
அரி நம சிவாயநம சிவாயநம
சிவ நம கட்டு இங்கே வராதே அங்கே போ’

**படுகளம் (தெய்மாடுபவர்களை திடீரென ஆடாமல் செய்து கீழே விழவைக்கும் மந்திரம்)**

படுபரபட்சி சர்வபட்சி
சர்வ பில்லிக்கும் சர்வ சூனியத்திற்கும்
அகோர சிங்கிலி அகோர கிங்கிலி இகார கிங்கிலி
இருனைப் பிடித்து நெற்றியில் திலகமிட்டு
சப்பாணி சாமுண்டி அறுதலை மாடன்
ஐயன் பிடாரி
அந்திப்பேய் சந்திப்பேய்
காலைப்பேய் மாலைப்பேய்
இவை எல்லாம் பிடித்து
செம்பினில் அடைத்து

துர்வத மலையை அடுப்பாய் மூட்டி
அக்கினியில் இட்டு
எரி எரித்து பொரி பொரித்து
புனல் வரை இட்டு
கொண்டு ஒடிவாடா சிங்கிலியா
சௌவும் கட்டு கௌவும் கட்டு
ஸ்ரீயும் கட்டு மறியும் கட்டு
சுpவாயநம சீக்கரம் சீக்கரம்
கட்டக் கட்டவே சிவாகா
(வடிவேல் இன்பமோகன், 2021;: 76-77)

**வெட்டு மந்திரம் (கட்டுக்களை வெட்டும் மந்திரம்)**

* ‘ஓம் நம திருபுரகாளி சத்துருகாளி
* அடி அடி காளி ஆனந்த மகாகாளி
* அரந்தர காளி அவ்வுமா காளி
* ஓரடிகாளி ஈரடி காளி மூவடிகாளி
* எதிர்த்தவன் தலையைக்குத்தி ரெத்தம் குடியடிகாளி.
* சுகுணவல்லி செய்தவன் இடத்திற்க்குச் சென்று இரத்தம் குடியடிகாளி
* வெட்டு வெட்டு ஏறு ஏறு எட்டுக்கையானவளே
* அமுதுண்ட காளி சுந்தரவீரகாளி
* சூரபத்மகாளி கர்மம் அணுகாமல்
* உத்தண்ட கரமும் ஏந்திய வாளும் கொண்டு வா காளி வெட்டு, வெட்டு’

**உரு ஏற்றல் (தெய்வமாடாமல் நிற்கும் குறிப்பிட்ட உடலில் தெய்வ உருவை இறக்கும் மந்திரம்)**

* ‘ஓம் அரகரமாரி சரணம் சரணம்
* அரிகை கரிகை சரணம் சரணம்
* ஆறு கடச்சி சரணம் சரணம்
* இந்திர தேவர்கள் வஞ்சனை சூனியம்
* ஏவல் விட்டவர் முன்னே எதிரேறு எதிரேறு
* ஈரலைக் கௌவு கௌவு
* இடது புல நாக்கை வாங்கு
* வலது கண்ணைக் கெடு
* இரும்புலக்கை கொண்டு இடி இடி
* அண்டம் குலுக்கு ஆகாசம் குலுக்கு
* கொடிமுடி குலுக்கு
* கொல்லு கொல்லு திமிலு திமிலு
* சக்தி வித்தகி சகல லோக நாயகி
* எட்டுத் திக்கு பதினாறு லோகமும் மாறி ஆடு
* தடுத்தவன் குழந்தையைக் காவலாய் கௌவு
* நச்சு முலச்சி ஏக நரசிங்க ரூபம் கொண்டு
* இரத்தத்தை வாங்கிக்குடி வாங்க்கி;க்குடி
* மலையாள பசுபதி கல்பூட்டு பூட்டி
* கண்ணன் ஒளித்தாலும் அப்பூட்டு
* தெறித்து ஆடடி அம்மா ஆடு
* மந்திரம் நீயே மருந்தும் தீயே
* சகல கலச்சி நாமம் மறச்சி
* தட்சி றிங்காசனத்தி சிவ சிவ
* மாரித்தாயே ஏறு ஏறு வீசு வீசு’

**மந்திரங்களின் செயல்முறை**

ஒவ்வொரு கட்டு மந்திரத்திற்கும் அதனை விடுவிக்கம் வகையில் வெட்டு மந்திரமுள்ளது. அதற்கேற்ற வகையில் செய்முறையுமுள்ளது. பூசாரிகள் ஐம்பதற்கு மேற்பட்ட கட்டுமந்திரங் களையும் அதற்குரிய வெட்டுமந்திரங்களை யும் வைத்துள்ளனர். அவற்றில் மூன்று வெட்டு மந்திரங்களின் செயல்முறை தரப் படுகின்றது. கட்டாடி மந்திரத்தால் கட்டுப் பட்டு ஆடாமல் நிற்கும்போது பூசாரி நிலத்தில் அட்சரம் வரைந்து கட்டாடியை அட்சரத்தின் முன் நிறுத்துவார்;. பின்னர் அட்சரத்தில் பழம், பாக்கு, வெற்றிலை, கமுகம்பாளை கொண்டு மடைவைத்து மந்திரம் உச்சாடனம் செய்வார். பின் அம்மடையைக் கட்டாடியின் காலிலிருந்து மந்திர உச்சாடனம் செய்தபடி தூக்கித் தலைக்குக் கொண்டுவரும்போது கட்டாடியில் தெய்வஉரு இறங்கத்தொடங்கும். பின் பூசாரி கட்டாடியின் தலையில் மடையை வைத்து, மந்திரத்தை வேகமாக உச்சாடனம் செய்ய, கட்டாடி உக்கிரங்கொண்டு தெய்வமாடி, பூசாரியைக் கட்டித்தழுவுவார். அப்போது அக்கட்டு அவிழ்க்கப்படுகின்றது என அர்த்தமாகிறது.

மற்றுமொரு செயல்முறை பின்வருமாறு: கோயில்பூசை வேளையில் கட்டாடி தெய்வ மாடாமல் நீண்ட நேரம் நிற்கும்போது பூசாரி கோயில் கருவறையில் அம்மனுக்குப் வைக்கப்பட்ட மடையை எடுத்துவந்து கட்டாடியின் தலையில் வைத்து மந்திர உச்சாடனம் செய்வார். அவ்வேளையிலும் கட்டாடி தெய்வமாடவில்லையாயின் மீண்டும் மந்திரம் உச்சாடனம் செய்து தலைக்குமேல் வைத்துள்ள மடையை எடுத்து அதன்மேல்

கற்பூரம் எரியவைத்து அதைக் கட்டாடியின் நெற்றிப்பொட்டிற்கு நேரெதிரே வைத்து அதி வேகமாக மந்திரத்தை உச்சாடனம் செய்து அதனை நிலத்தில் வைப்பார். பின்னர் தேங்காய் ஒன்றை எடுத்து மந்திரம் கூறி அவர் முன்னுள்ள மடையில் இரண்டாக உடைக்க, கட்டாடி தெய்வமாடுவார்.

இவற்றைத் தவிர கையில் ஆயுதங்கள் கொண்டு மந்திரக்கட்டை அவிழ்க்கும் வெட்டு மந்திரங்களுள்ளன. பூசாரி கையில் தாமரைப்பூவை எடுத்து மந்திரத்தை உச்சாடனம் செய்யத்தொடங்குவார். பின்னர் அத்தாமரையில் கற்பூரத்தை எரியவைத்துக் கட்டாடியின் முன்னால் வைத்து மந்திர உச்சாடனம் செய்யத் தொடங்குவார். இந்த உச்சாடனம் மெதுவாகத் தொடங்கி வேகமாக உச்சரிக்கப்படும். பின்னர் பூசாரி தனது மற்றொரு கையில் சூலத்தை எடுத்து வைத்து, தெய்வத்தை அழைப்பதுபோல் மந்திர உச்சாடனம் செய்வார். இந்த அழைப்பிற்குத் தெய்வஉரு கட்டாடியில் வராமல் இருந்தால் சூலத்தின் நடுவில் ஒரு தேசிக்காயைக் குத்தித் தாமரை, சூலம் இரண்டையும் கையில் கொண்டு கட்டாடிக்கு நேரெதிரே நின்று தெய்வத்தை அழைப்பார். அவ்வேளை கட்டாடி தெய்வமாடி துள்ளி எழுந்து பூசாரியின் கையில் வைத்துள்ள சூலத்தைப்பறித்து எடுத்துத் தெய்வமாடுவார்.

### மந்திரச் சொற்களும் உச்சாடனமும்

இங்கு பயன்படும் மந்திரங்கள் நோக்கம், செயல், உச்சரிப்பு போன்ற கூறுகளைக் கொண்டவை. நோக்கம் என்பது தெய்வ உருவை மனித உடலில் ஏற்றுதல், அதைக் தடுத்துக் கட்டல், அக்கட்டை அவிழ்த்தல் போன்றவையாகும். தெய்வ உருவைக் கட்டுபவர்கள் அதன் செயல் முறையைக் கோயிலிலும் கோயிலுக்கு வெளியிலும் செய்கின்றனர். சிலவேளைகளில் அதைப் பார்ப்பதற்கு அனுமதிப்பதில்லை. கட்டை அவிழ்ப்பவர்கள் மந்திரச் செயல் முறையை அனைவரும் பார்க்குமாறு செய்கின்றனர். இந்நிகழ்வுகள் குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறுகின்றன.

உச்சரிக்கப்படும் சொற்கள் புராண இதிகாச கதைகளைச் சம்பவங்களை இணைத்துக் கூறும் தன்மை கொண்டவை. புராண இதிகாசக் கதைகளைச் சொல்வதன் ஊடாகச் சம்பவங்கள், பாத்திரங்கள் ஆகிய வற்றின் சக்தியைத் தாம் கூறும் மந்திரத் திற்கு அளிக்கின்றனர். 'இலட்சுமணர் கீறிய கோடு' என்பது இதிகாசத்தில் முக்கியமானது. அக்கோட்டை இராவணனாலும் கடக்க முடியவில்லை. அத்தகைய சக்தி கொண்ட தாக இதிகாசம் கூறுகின்றது. 'லெட்சுமணரும் கோடி கட்டி மறைத்தால் போலே நானும் இந்தக் கோட்டை கொண்டு மறித்தேன்' என்னும் வரியைச் சொல்வதன் ஊடாக, தன்னுடைய நோக்கை அடைவதற்காக இதிகாச ஆற்றலை மறிப்பு என்னும் மந்திரத்திற்கு ஏற்றுகின்றனர். வெட்டு மந்திர த்தில் 'கையில் நாக பாசம் இருக்கிறது. ஐயும் கிலியும் சவ்வும் அகார சிகரத்தி னாணை எளும்பு' எனக் கூறப்படுகின்றது. 'நாகபாசம்' என்பது இராமாயணத் தொன்மத் தில் கூறப்படும் ஆயுதம். இது நாகங்கள் சூழ்ந்த கயிறுபோல் இருப்பதால் நாகபாசம் என அழைக்கப்படுகின்றது. இது பாம்புகள் போல் ஒருவரைச் சுற்றிக் கட்டக்கூடிய ஆயுதமாக இராமாயணத்தில் கூறப்படுகின் றது. அத்தகைய 'சக்தி பொருந்திய ஆயுதம் என்னிடம் உள்ளது. அதனால் கட்டிய கட்டுக்களிலிருந்து நீ எளும்பு' என எழுப்புவதாக இம்மந்திரம் உள்ளது. இதிகாச சம்பவங்கள் இணைக்கப்படுவதால் மந்திரமும் அதன் சக்தியைப்பெறுகின்றது.

மந்திரங்களில் உச்சாடனங்களில் அரகர, சரணம், வீசு, எறி, வெட்டு, கொல், கெளவு, இரத்தம் குடி, கெடு போன்ற சொற்கள் அதிகம் இடம்பெறுகின்றன. இச்சொற்கள்; பழிவாங்கல், அழித்தல், தண்டித்தல் போன்ற வற்றுடன் இணைந்த சொற்களாகவுள்ளன. அத்துடன் ஒத்த ஓசையுடைய சொற்கள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. அவை: 'கொல்லு, திமிலு, அடி, காளி, ஆனந்த மகாகாளி, அரந்தர காளி, அவ்வுமா காளி, ஓரடிகாளி, ஈரடிகாளி, மூவடிகாளி, அகோர சிங்கிலி, கிங்கிலி இகார' இச்சொற்கள் புனிதத்தன்மை கொண்டதாகவும் சக்தி அளிப்பதாகவும் நம்பப்படுகின்றன.

மந்திரக்கட்டை அவிழ்க்கும் மந்திர உச்சாடனங்கள் தெய்வத்தைக் கட்டுபவரைத் தண்டிக்குமாறு கூறுகின்றன. தெய்வங்களின் சக்திகொண்டு கட்டியவரைப் பயமுறுத்தும் தன்மை இம்மந்திரங்களில் வெளிப்படுகின் றன. அதாவது கட்டியவரின் கண்ணைக்

குத்து, இரும்புலக்கையால் இடி, கட்டியவர் குழந்தையைக் காவுவாங்கு எனக் கூறுவதன் வாயிலாகக் கட்டுபவர் அச்சுறுத்தப் படுகின் றார். அத்துடன் தெய்வத்தின் சக்தியும் விவரிக்கப்படுகின்றது. அண்டம் குலுங்க, ஆகாசம் குலுங்க வரும்படி தெய்வத்தை அழைக்கின்றனர். இதன் வாயிலாகத் தெய்வ த்தைக் கட்டுபவரை அச்சத்திற்குள்ளாக்கல் என்பதுடன் கட்டியவரைவிட அதிகம் சக்தி கொண்ட ஆயுதங்களும் மந்திரச் சக்தியும் கட்டை அவிழ்ப்பவரிடமிருப்பதால் உடனே தெய்வத்தை வந்திறங்கும்படி ஆணையிடும் தன்மையும் உள்ளது. இம்மந்திரங்கள் உச்சரிப்பு, செயல் மூலம் தங்களது விருப்பை நிறைவேற்றுகின்றனர்.

**பத்ததி மந்திரத்தின் பயன்பாடும் நோக்கமும்**

மந்திர கட்டுக்களில் கட்டுபவர் கட்டாடியின் அருகில் நின்று கட்டுகின்றார்கள். கட்டுக் களை அவிழ்ப்பவர்களும் கட்டாடிக்கு அருகில் நின்று அவிழ்க்கின்றனர். அத்துடன் கட்டுபவர்களின் மந்திரத்திற்குப் பொருத்த மான அவிழ்க்கும் மந்திரங்களைப் பயன் படுத்தும்போதே கட்டுக்கள் அவிழ்கின்றன. இம்மந்திரச் செயற்பாடுகள் இடம்பெறும் வெளி மக்கள், கப்புகர், பூசாரி, தெய்வமாடு பவர்கள் ஆகியோர் இணைந்து செயற்படும் வெளியாகும். மந்திரச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் ஆழ்ந்த அனுபவமும் மந்திர அறிவும் உடையவர்கள். இவர்கள் அவ்வூரைச் சேர்ந்தவராகவும் அக்கோயிலுக்கு உரித்து டைய சமூகத்தைச் சேர்ந்தவராகவும் இருப்பர். உருவேற்றலைத் தடுப்பவர்கள் அவ்வூரைச் சேர்ந்தவராகவோ அல்லது வேறு ஊரைச் சேர்ந்தவராகவோ காணப்படுகின்றனர். இவர்கள் தேர்ந்ததொரு குருவிடம் சென்று முறையாக மந்திரங்களைக் கற்றறிந்தவராக உள்ளனர்.

இவ்வழிபாட்டில் செயற்படும் மந்திரக் குழுவி னரும் (பூசாரி அவ்வூரைச் சேரந்தவராக இருத்தல்) மக்களும் நிர்ந்தரமான உறவுடைய வர்களாகவுள்ளனர். இவர்கள் கோயிலுள்ள எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவராகவும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவராகவுமுள்ளனர். இவர் களுக்கிடையிலான உறவு நிரந்தரமானது. மாரியம்மன் மந்திரச் சடங்குகளில் கோயில் கப்புகர் (மந்திர ஆளுமைமிக்கவர்) முக்கிய மானவர். இவர் வழிபாட்டை நடத்தி செல்பவராகச் செயற்படுகின்றார். இவர் கோயிலில் கப்புகராகவும் ஊரில் மந்திரச் செயற்பாடுகளை மேற்கொள்பவராகவுமுள் ளார். கோயில் வழிபாட்டில் இவரது மந்திர ஆளுமை பரிசோதனை செய்யப்படுகின்றது. அதன் மூலம் ஆளுமை மிக்கவராக அடையாளப்படுத்தப்படுகின்றார். கோயில் கப்புகர் என்பது இவருக்கான மதிப்பாக உள்ளது. வழிபாட்டில் இடம்பெறும் மந்திரச் செயற்பாடுகள் மந்திர ஆளுமையை வெளிப்படுத்துவதாக இருப்பதுடன் மக்கள் தெய்வங்களைக் கட்டுவதனூடாகத் தங்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்துகின்றனர். ஊரிலுள்ள கோயில் அதிகாரமிக்க சமூகத்த வர்க்கு உரியதெனின் அவ்வூரில் வாழும் ஏனைய சமூகத்தினர் தெய்வத்தைக் கட்டுவதன் மூலம் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர். அல்லது மக்கள் அக்கோயில் பூசாரியை ஏற்றுக் கொள்ளவில்லையாயின் சடங்கை நிகழவிடா மல் செய்வதற்கும் மந்திரத்தால் கட்டுகின்ற னர். இச்சந்தர்ப்பங்களில் அக்கோயில் பூசாரி தனது மந்திர ஆளுமையால் இக்கட்டுக் களை முறியடிக்க வேண்டும். அல்லது அக்கோயில் பூசாரி என்பதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். எனவே மந்திரச் செயற்பாடு மக்கள் எதிர்ப்புணர்வை வெளிப் படுத்தும் இடமாகவும் பூசாரியின் மந்திரத்தைப் பரிசோதிக்கும் நிகழ்வாகவும் பூசாரியின் மந்திர ஆற்றலை வெளிப்படுத்தும் தளமாகவுமுள்ளது. இங்குப் பூசாரிக்கும் மக்களுக்குமான உறவு மக்களின் நோய் தீர்க்கும் நிகழ்வாக இல்லாமல் மந்திரத்தால் தெய்வத்தைப் பரிசோதிக்கும் நிகழ்வாக உள்ளது. பூசாரியின் மந்திர அறிவை மக்கள் ஏற்றுக்கொள்வதற்கான செயற்பாடாகவுமுள் ளது.

மக்கள் பக்தி பூர்வமாக இவ்வழிபாட்டில் கலந்து கொள்கின்றனர். மக்களுக்கும் கப்புகர், பூசாரி, தெய்வமாடுபவர்கள் ஆகியோர்களுக்கிடையிலான உறவுநிலை ஊர் சார்ந்தது. அதேவேளை பிற ஊர்களி லிருந்து வந்து கட்டுபவர்களையும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் தொடர்ந்து கட்டுவதனால்; வழிபாடு தடைபடுகின்றது. அப்போது கோயில் கப்புகர், பூசாரி ஆகியவர்களின் மந்திர ஆற்றலை விமர்சிப்ப வராகவுமுள்ளனர். மந்திரக்கட்டுக்களும்

அதை அவிழ்க்கும் சடங்குகளும் இக் கோயிலின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்து வதாகவுமுள்ளது. இதனால் மந்திரச் செயற்பாடுகளைப் பார்ப்பதற்கு அருகிலுள்ள ஊர்களிலிருந்து மக்கள் வருவதையும் காணலாம்.

## முடிவுரை

மாரியம்மன் வழிபாட்டில் பயன்படுத்தப்படும் மந்திரங்கள் என்பது சொல். செயல், நோக்கு போன்றவற்றைக் கொண்டவை. ஒவ்வொரு மந்திரமும் ஒவ்வொரு நோக்கைக் கொண்டது. இங்கு கோயில் கதவு திறத்தல் முதல் மூடும் வரை எல்லாச் சடங்கு நிகழ்வுகளிலும் மந்திரங்களின் பயன்பாடு இன்றியமையாதது. இம் மந்திரங்களைத் தெய்வத்திடம் வழிபாட்டை ஏற்றுக்கொள்ளச் செய்யும் மந்திரங்கள், சக்தியேற்றும் மந்திரங் கள், தெய்வ உருவேற்றும் மந்திரங்கள், தெய்வத்தைக் கட்டும் மந்திரங்கள் என வகைப்படுத்தலாம். மடைக்கு சக்தியேற்ற மந்திரங்கள் கூறப்படுகின்றன. விநாசகப் பொங்கல் பானைக்கு கூறப்படும் மந்திரங் கள் பானைக்கு சக்தி ஏற்றலும் பொங்கலை ஏற்கும்படி செய்தலுமாகும். தீக்குழி இறங்கும்போது தீ சுடாமல் தீயைக் கட்டும் மந்திரங்கள் வேண்டலுக்குரிய மந்திரங்களா கும். அத்துடன் கட்டும் மந்திரங்கள் தெய்வத்தைப் பொங்கல் பானையை கட்டுவதற்குப் பயன்படுகின்றன. இக்கட்டுக் கள் பூசாரிகளால் அவிழ்க்கப்பட்டு வழிபாடு தொடர்ந்து நடாத்தப்படுகின்றது. இங்கு மந்திரச் செயற்பாடு விளையாட்டாக நிகழ்கின்றன. இம்மந்திரங்கள் சக்தியெற்றல் - வேண்டல் - தெய்வத்தைக்கட்டுப்படுத்தல் - கட்டுக்களை அவிழ்த்தல் போன்ற செயற்பாடு களைக் கொண்டுள்ளன. அதேவேளை தெய்வமாடும் கட்டாடி தெய்வமாடாமல் நிற்கையில் அவரை மந்திரத்தால் கட்டியுள்ள னர் என்னும் புரிதல் மக்களுக்கும் பூசாரிக்கு முள்ளது. இங்கு எல்லாக்கட்டுதலும் வெளிப் படையானவைகளில்லை. இவை கட்புலனா காதவகையாகும். வழிபாட்டில் தெய்வத்தைக் கட்டும் மந்திரங்களுக்கு நிரந்தரமான நோக்க மில்லை. இங்கு மனிதர் தன் திறனால் தெய்வத்தைக் கட்டமுடியும் என நிருபிக்கின்றனர். இங்கு கப்புகர், பூசாரி, தெய்வமாடுபவர்கள், தெய்வ உரு ஆகியோரின் உண்மைத்தன்மையை மக்கள் மந்திரம் மூலம் பரிசீலனை செய்வதன் ஊடாக, அவ்வழிபாட்டை அத்தெய்வத்தை ஏற்றுக்கொள்கின்றனர். குறிப்பாக நிறுவன சமயத் தெய்வங்கள் மனிதர்களின் பக்தி யைப் பரிசோதனை செய்து வரமளிக்கின் றனர். இங்கு மந்திரங்கள் மூலம் பக்தர்கள் தெய்வங்களைப் பரிசீலனை செய்து அதன் நம்பகத்தன்மையை தீர்மானிக்கின்றனர். இங்கு சமூகம் தெய்வ இயல்பு கொண்டதாகச் செயற்படுகின்றது. இவ்வழிபாட்டு வெளியில் தெய்வங்களுக்கான அதிகாரம் மக்களுக் கானதாகின்றது. இம்மந்திரச் சடங்குகளின் செயற்பாட்டை மேலைத்தேய கருத்தாக்கங் கள் முழுமையான விளக்கவில்லை எனலாம். ஏனெனில் பத்ததி மந்திரச் சடங்குகள் ஒரே தன்மை கொண்ட ஒரே செயற்பாட்டைக் கொண்டதல்ல. அவை பன்மைத்தன்மையான வெளிப்பாட்டைக் கொண்டவை. அத்துடன் இம்மந்திரச் சடங்கு நிகழ்வுகளின் மூலம் ஏற்படுத்தும் உரையாடல் மனிதருக்கிடையி லான மற்றும் மனிதர், தெய்வங்களுக்கிடை யிலான புலப்படாத மோதலும் அதைத்தீர்தலுமாகும். இங்கு மந்திரங்களால் தெய்வத்தைக் கட்டுப்படுத்து கின்றனர். பின்னர் விடுவிக்கின்றனர். இம்மந்திரச் சடங்கு வழிபாட்டில் தெய்வங் களை விட மனிதர்கள் சக்தி கொண்டவர் களாக உள்ளனர்.

## துணை நூற்பட்டியல்

1. சிவசுப்பிரமணியன், ஆ, 2010. மந்திரமும் சடங்குகளும், நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
2. சுந்தர் காளி, 2005. திருமுகமும் சுயமுகமும் - பண்பாட்டாய்வுக் கட்டுரை கள், மதுரை:காரோன்-நீரோன் பதிப்பகம்.
3. கோசாம்பி, டி.டி. 2018. மாயையும் எதார்த்தமும்,(மொ.பெ). வி.என். ராகவன் சென்னை: அலைகள் வெளியீட்டகம்.
4. வடிவேல் இன்பமோகன், 2021. கிழக்கு இலங்கைச் சடங்குகள் சமயம் - கலை – அழகியல், கொழும்பு: குமரன் புத்தக நிலையம்.
5. Bhattacharyya, N N. 1982. History of the Tantric Religion (A History, Ritualistic and Philosophical Study), New Delhi: Manohar Publications.
6. Emile Durkheim, The Elementary Forms of Religious Life, London: the free press, New York.